செய்தி வெளியீடு எண் : 2168 நாள் : 31.10.2023

**<u>தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்திடக் கோரி, மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் திரு. வி. முரளிதரன் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுதிய கடிதத்தினை, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் தலைமையிலான குழுவினர் நேரில் அளித்தனர்:</u>**

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்திடக் கோரியும், கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுவிக்கவும், பறிமுதல் செய்யப்பட்டுள்ள மீன்பிடிப் படகுகளைத் திரும்ப வழங்கிடக் கோரியும், இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வினை ஒன்றிய அரசு விரைந்து காண வேண்டுமென்று வலியுறுத்தியும், மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை இணையமைச்சர் திரு. வி. முரளிதரன் அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர்.பாலு அவர்கள், இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. நவாஸ் கனி மற்றும் இராமநாதபுரம் மாவட்ட மீனவ சங்கத்தைச் சார்ந்த திரு. என்.ஜே. போஸ், திரு. பி. சேசுராஜா, திரு. ஆர். சகாயம் ஆகியோருடன் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் திரு. வி. முரளிதரன் அவர்களை இன்று (31-10-2023) நேரில் சந்தித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தினை வழங்கினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், கடந்த சில மாதங்களாக இதுபோன்று தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படும் நிகழ்வுகள் பெருமளவில் அதிகரித்து வருவதாகக் கவலைபடத் தெரிவித்துள்ளார். குறிப்பாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த 37 மீனவர்கள் IND-TN-10-MM-860, IND-TN-10-MM-985, IND-TN-10-MM-915, IND-TN-10-MM-717 மற்றும் IND-TN-10-MM-717 ஆகிய பதிவு எண்களைக் கொண்ட மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற நிலையில், 28.10.2023 அன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களது 5 மீன்பிடிப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நமது மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்திற்கு மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியுள்ள நிலையில், அவர்கள் இதுபோன்று அடிக்கடி கைது செய்யப்படுவது மீனவ சமூகத்தினரிடையே பெரும் துயரத்தையும், அச்ச

உணர்வையும் ஏற்படுத்தியிருப்பதை மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார் எனக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2023 அக்டோபர் மாதத்தில் மட்டும் தமிழ்நாட்டைச் சேர்ந்த 64 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களது 10 மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் கைது செய்யப்படுவதும், அவர்களது மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டு வரும் நிலையில், தமிழ்நாட்டு மீனவர்கள் இதுபோன்று கைது செய்யப்படுவது தடையின்றி தொடர்வதாக வேதனையுடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், எவ்வித காலதாமதமுமின்றி, உரிய தூதரக நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்று தமிழ்நாட்டு மக்கள் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட அனைத்து மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் திரு. வி. முரளிதரன் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுதிய கடிதத்தினைப் பெற்றுக் கொண்டு, அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்த மாண்புமிகு ஒன்றிய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் திரு. வி. முரளிதரன் அவர்கள், இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது கடிதம் ஏற்கெனவே தங்களது துறைக்கு வந்துவிட்டதாகவும், அதனடிப்படையில் உரிய நடவடிக்கை ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் திரு. டி.ஆர். பாலு அவர்களது தலைமையிலான குழுவினரிடம் தெரிவித்துள்ளதோடு, இலங்கை அதிகாரிகளுடன் இதுதொடர்பாக ஒன்றிய அரசின் சார்பில் தொடர்ந்து பேசப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

- - - - - -

**Text of D.O. Letter dated 30-10-2023 of the Hon’ble Chief Minister of Tamil Nadu Thiru. M.K. Stalin to the Hon’ble Union Minister of State for External Affairs Thiru. V. Muraleedharan requesting to take necessary steps to release all fishermen and fishing boats that were apprehended by the Sri Lankan Navy.**

I am sending this letter through our Parliamentary delegation led by Thiru T. R. Baalu M.P., to bring to your kind attention to the serious issue of repeated apprehensions of our Indian fishermen by the Sri Lankan Navy. The frequency of such incidents are increasing at an alarming rate in the past few months.

A couple of days ago, on 28/10/2023, 37 fishermen from Tamil Nadu, along with their 5 Fishing boats bearing registration numbers IND-TN-10-MM-860, IND-TN-10-MM-985, IND-TN-10-MM-915, IND-TN-10-MM-717 and IND-TN-10-MM-972 were apprehended by the Sri Lankan Navy.

As you are well aware, our fishermen are solely dependent on fishing activity for their livelihood and these frequent arrests are causing immense distress and suffering to the fishermen community. As I have pointed out in my letter, such acts of Sri Lankan Navy have created pressure and panic in the minds of fishermen communities in the State. I wish to state that Tamil Nadu fishermen feel that their voices are not heard and I feel that Government of India should stand take this matter more seriously with the Sri Lankan government to ensure the safety of our fishermen and protect their traditional fishing rights in the Palk Bay region.

In the month of October, 2023 alone, so far, 64 Tamil Nadu fishermen along with their 10 fishing boats have been apprehended by the Sri Lankan Navy. Despite our persistent demand for stopping these arrests and seizure of boats, apprehension of our fishermen continues unabated. Therefore, I urge you on behalf of the people of Tamil Nadu, to immediately initiate solid diplomatic initiatives without further delay to end this.

I once again request you to take necessary steps to secure the release all the fishermen and their fishing boats that were apprehended by Sri Lankan Navy at the earliest.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in